தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1972 மார்ச் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

சென்னைப் பெருநகர்த் திட்டம்

*433 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பெருநகர்த் திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னைப் பெருநகர்ப் பகுதி மேம்பாட்டிற்கான இருபதாண்டு காலத்திட்டம் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு, நிதி உதவி மத்திய அரசிடமிருந்தும், உலக வங்கி ஐக்கிய நாடு முகவாமைப்பிடமிருந்தும் எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த சென்னை பெருநகர்த் திட்டத்தில் எந்தெந்தக் காரியங்கள் அடங்கியுள்ளன என்பதனையும் இது நிறைவேற்றப்பட எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதனையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், சென்னை மாநகரத்தைச் சுற்றிலுமுள்ள செங்கற்பட்டு மாவட்டத்தினுடைய பகுதிகளில் பலவற்றைச் சேர்த்து 459 சதுர மைல் உள்ள அளவுக்கு, இன்னும் இருபதாண்டுக் காலத்தில், அதாவது 1991-ம் ஆண்டில், இந்த நகரத்தைச் சுற்றி எப்படி எப்படி மாபெரும் வளர்ச்சி ஏற்பட்டுவிடும் என்பதை

[1972 மார்ச் 11

அடிப்படையாக வைத்து, அந்த மக்கள் தொகை வளர்ச்சியும், போக்குவரத்து நெருக்கடியும், சுகாதாரத் தேவையும், கல்வித் தேவைகளும் எப்படியெப்படி விரிவடையும் என்பதைக் கருத்திற்கொண்டு அவையெல்லாம் நிறைவேற்றப்படுவதற்கு வழி வகுப்பதற்காக, அந்த வழி வகுக்கப்படாவிட்டால் ஏற்படக்கூடிய பெரிய பாதகத்தைத் தடுப்பதற்கு இருபதாண்டுக் காலத் திட்ட மொன்று 938 கோடி ரூபாய் அளவுக்குத் தீட்டப்பட்டிருக்கிறது. இது ஏறத்தாழ இரண்டாண்டுக் காலமாகப் பரிசீலிக்கப்பட்டது. இந்தத் திட்டம், சாலை மேம்பாடு, நீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றும் திட்டம், வீட்டு வசதித் திட்டம், குடிசை மாற்றுத் திட்டம் ஆகியவையும், பள்ளி, மருத்துவமனை போன்ற பல்வேறு வசதிகளும் இந்தப் புறநகர்த் திட்டத்தில் அடங்கியவையாகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த 938 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படவிருக்கும் இருபதாண்டுத் திட்டத்தில் பாதாள இரயில் போடுவது போன்ற அம்சங்களும் சேர்ந்திருக் கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : போக்குவரத்து வசதி என்கிற பகுதியில் அதுவும்கூட இருக்கக்கூடும். ஆனால், அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

* 434 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether this Government have requested the Centre during 1971 to give financial assistence for the development of Madras Metropolitan Area ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. என். கே. பழனிசாமி : இந்த 938 கோடி ரூபாய்த் திட்டத்தில் மாநில சர்க்காரின் பங்கு என்ன? மத்திய சர்க்கார் பூராச் செலவுத் தொகையும் கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருக் கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மத்திய அரசு இன்னும் இதை விவாதத்திற்குரிய ஒரு பிரச்சினையாக வைத்திருக்கிறது. விவாதித்து முடிவு எடுக்கவேண்டும் என்று தெரிவித்திருக் கிறார்கள். அதேபோல் உலக வங்கி ஐக்கிய நாடு முகவரமைப்பின் குழுவைச் சேர்ந்தவர் இங்கே வந்திருந்தார். Mr. Westebbe,